**//தனி கவனம்//** **//மிக மிக அவசரம்//**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3096/அ5/2024 நாள். .04.2024

---

பொருள் : பள்ளிக்கல்வி – 2025–2026ஆம் நிதியாண்டு – அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி – பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – விவரம் கோருதல் – சார்பு

பார்வை : 1. சென்னை – 6 , தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் மின்னஞ்சல் பெறப்பட்ட நாள்.08.04.2025
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்.08.04.2025

-----

பார்வையில் 2ல் காணும் செயல்முறைகளில் வேலூர் மாவட்டத்தில் 2025–26ஆம் நிதியாண்டில் அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பழுது நீக்கம் செய்ய வேண்டிய கட்டிடங்கள் சார்பான விவரங்களை இவ்வலுவலகத்தில் 15.04.2025க்குள் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதுநாள்வரை இணைப்பில் கண்டுள்ள பள்ளிகளில் இருந்து பழுது நீக்கம் செய்ய வேண்டிய கட்டிடங்கள் சார்பான விவரங்கள் பெறப்படவில்லை. இதனால் பொதுப்பணித்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து அனுப்ப இயலாத நிலை உள்ளது.

எனவே, இன்னும் அனுப்பாத பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தனிகவனம் செலுத்தி பழுது நீக்கம் செய்ய வேண்டிய கட்டிடங்கள் சார்பான விவரங்களை தெளிவாக குறிப்பிட்டு (எத்தனை வகுப்பறைகள் – தரைத்தளம்/மேல்தளம்/கழிவறைகள்/குடிநீர் வசதி/ மின்பழுதுபார்ப்பு) புகைப்பட நகலுடன் உடனடியாக இவ்வலுவலக 'அ5' பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

இணைப்பு :–பள்ளிகளின் பட்டியல்

பெறுநர்,
தலைமை ஆசிரியர்கள்,
அரசு உயர் நிலை / மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.